**சார்பு நீதிமன்றம், நாங்குநேரி**

**முன்னிலை:- திரு. P.S. ரஷ்கின் ராஜ், B.A., L.L.M.,**

**சார்பு நீதிபதி, நாங்குநேரி**

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ம் நாள் திங்கள்கிழமை

**இடைநிலை மனு எண்.1/2024 இன்**

**மேல்முறையீட்டு வழக்கு எண்.195/2020**

1) சுந்தரகனி

2) செல்வி .... மனுதாரர்கள்/எதிர்மேல்முறையீட்டாளர்கள்

// எதிர் //

1) முத்துபாண்டியன்

2) கிருஷ்ணகுமார்

3) ஜெயபிரகாஷ்

4) மூர்த்தி

5) தங்கமணி

6) கிருஷ்ணமூர்த்தி

7) மகேந்திரன்

8) விஜயகுமார்

9) சிவகுமார்

10) கோபி

11) தாஸ்குமார்

12) சுந்தர் ராஜ்

13) பூதலிங்கம் பிள்ளை

14) ஷீபா

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:38:07 +0530

15) சீதாராமன்

16) வெங்கடேஷ்

17) ராமசுந்தரம்

18) பத்மநாபபிள்ளை

19) முத்து

20) மெஹருநிஷா

21) ரமேஷ்

22) முத்துராஜ்

23) சந்திரகலா

24) கலைவாணி

25) ஜோதி

26) தீபா

27) பாண்டித்துரை

28) விஜயன்

29) சுடலை முத்துவேல்

30) திருநாவுக்கரசு

31) ஜோசப்ராஜன்

32) தங்கம்மாள்

33) மகாவிஷ்ணு ... எதிர்மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்கள்

இந்த மனுவானது, என் முன்பு 03.08.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. இ. இராவணசிவன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 19 மற்றும் 21 முதல் 33ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. இ. சீனிவாசன் அவர்கள் ஆஜராகியும்,

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:38:12 +0530

20 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. S. அமர்ஜிதா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**உத்தரவு**

இம்மனுவானது, இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை மேல்முறையீட்டில் மனுதாரர்கள் தரப்பு கூடுதல் ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 41 விதி 27 மற்றும் பிரிவு 151 ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனு சுருக்கம் :**

மனுதாரர்கள் மேல்முறையீட்டில் எதிர்மேல்முறையீட்டாளர்கள் ஆவர். நாங்குநேரி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.222/2007 தாக்கல் செய்யப்பட்டு, அதில் மனுதாரர்களுக்கு ஆதரவாக 27.07.2016 ல் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு எதிராக இந்த மேல்முறையீட்டை எதிர்மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்துள்ளார்கள். வழக்குச் சொத்து தங்களது அனுபவத்தில் உள்ளது என்பதற்கு கீழமை நீதிமன்றத்தில் வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.6 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்குச் சொத்து நாளது தேதிவரை தங்கள் அனுபவத்தில் உள்ளது என்பதற்கு வருவாய்த்துறை ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது. அவைகள் கோப்பிற்கு பெற உத்தரவிடக் கேட்டு இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:38:18 +0530

எனவே இம்மனு அனுமதிக்கப்படாவிடில் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படுவதாய் உள்ளது. எனவே இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) **1 முதல் 19 மற்றும் 21 முதல் 33 வரையுள்ள எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 20ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்** :

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இந்த அசல் வழக்கு வாதியான சுந்தரக்கனி மற்றும் செல்வி ஆகியோர்கள் ஆவணங்களை போலியாக தயார் செய்து, அதனடிப்படையில் நீதிமன்றத்தை ஏமாற்றி உண்மை விபரங்களை மறைத்து தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பெற்றுள்ளார். மேற்படி தீர்ப்பிற்கு எதிராக இந்த மேல்முறையீட்டாளர்களான பிரதிவாதிகள் இந்த மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளனர். மேல்முறையீட்டு வழக்கில் உண்மை விபரம் தெரிந்துவிடும் என்பதால், இந்த எதிர்மேல்முறையீட்டாளர்கள் தற்பொழுது ஆவணங்களை நீதிமன்றம் கோப்பிற்கு எடுக்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர். அவ்வாறு தாக்கல் செய்திருக்கிற ஆவணங்கள் இந்த மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்த பிறகு விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பாணையின் அடிப்படையில் வாதிகள் பெயருக்கு வருவாய்த்துறையில் பெயர் மாற்றம் செய்து, அதனை ஆதாரமாக வைத்து ஆவணங்களை ரிசிவ் செய்ய கேட்டுள்ளனர். வாதிகளின் வழக்குப்படி UDR

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:38:23 +0530

காலத்திற்கு முன்பே வாதிகளின் கைவசத்தில் இருப்பதாக கூறி வருகின்றனர். ஆனால் தாக்கல் செய்திருக்கிற ஆவணங்கள் அனைத்தும் UDR காலத்திற்கு பிறகு ஏற்பட்டதாகும். பட்டா மற்றும் தீர்வை ரசீதுகள் அனைத்தும் இந்த மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்த பிறகு ஏற்பட்டது என்பதால் ஆவணங்களை கருத்திற் கொள்ளக்கூடியதாக இல்லை. எனவே மனுதாரர்களின் மேற்படி மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4)** இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இம்மேல்முறையீட்டில் மனுதாரர்கள் தரப்பு கூடுதல் ஆவணங்களாக குறியீடு செய்யப்பட வேண்டுமா? இல்லையா ? என்பதேயாகும்.

**5)** இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் இம்மனுவுடன் சேர்த்து 1வது ஆவணமாக பட்டா எண்.2056 பதிவிறக்கம் செய்யப்பட்டது. 2 வது ஆவணமாக 1426 ம் பசலிக்குரிய எண்.2-ம், 3 வது ஆவணமாக 1432 ம் பசலிக்குரிய எண்.2 ம், 4 வது ஆவணமாக 1426 ம் பசலிக்குரிய தீர்வை - 2 எண்ணமும், 5 வது ஆவணமாக 1427 ம் பசலிக்குரிய தீர்வை - 2 எண்ணமும், 6 வது ஆவணமாக 1428 ம் பசலிக்குரிய தீர்வை - 2 எண்ணமும், 7 வது ஆவணமாக 1430 ம் பசலிக்குரிய தீர்வை - 2 எண்ணமும், 1432 ம் பசலிக்குரிய தீர்வை 4 எண்ணமும் கூடுதல் ஆவணங்களாக இந்த குறுக்கு மேல்முறையீட்டில் தாக்கல் செய்ய வேண்டும் என்பதாகும். வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:38:28 +0530

ஆவணங்கள் சட்டப்படியான பட்டாக்களாக கருத முடியாது. அதனை தொடர்ந்து வாதிகள் பெயருக்கு ஏற்பட்ட வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணமும் சட்டப்படியான ஆவணங்களாக கருத முடியாது. மேற்படி ஆவணங்களின் தொடர்ச்சியாக ஏற்பட்ட தீர்வை ரசீதுகளும் சட்டப்படியான ஆவணங்களாக கருத முடியாது. தபசில் சொத்துக்கள் சம்பந்தமாக, ஈனமுத்து நாடார் பெயரிலுள்ள வரிவிதிப்பு ரசீதோ, செல்லையா நாடாரின் பெயரிலுள்ள வரிவிதிப்பு ரசீதோ, சொக்கலிங்க நாடாரின் பெயரிலுள்ள வரிவிதிப்பு ரசீதோ தாக்கல் செய்யாமல், தற்போது சட்டத்திற்கு புறம்பான ஆவணங்களை பயன்படுத்தி ஏற்பட்ட வரிவிதிப்பு ரசீதுகளை இந்த மேல்முறையீட்டில் குறியீடு செய்வதால் வாதிகளுக்கு எந்த பலனும் கிடைக்க வாய்ப்பு இல்லை. ஏற்கனவே, விசாரணை நீதிமன்றத்தில் பயிரிடும் கணக்கு பசலி 1388 முதல் 1415 வரை வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதனை பரிசீலனை செய்யும்போது, மண்டல துணை வட்டாட்சியர் அவர்களால் ஈனமுத்து மற்றும் செல்லத்துரை பெயரில்தான் அடங்கல் பதிவேடு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஈனமுத்து மற்றும் செல்லத்துரை அல்ல என்றும், ஈனமுத்து மகன் செல்லையா நாடார் என்பதை வாதிகள் விசாரணை நீதிமன்றத்தில் தெளிவுபடுத்தாததால், மேற்படி அடங்கல் பதிவேடை இந்த மேல்முறையீட்டில் குறியீடு செய்வதால் எந்த பலனும் வாதிகளுக்கு கிடைக்கப்போவது இல்லை. எனவே மேற்கண்ட ஆவணங்கள் இம்மேல்முறையீட்டு வழக்கை தீர்மானிக்க

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:38:33 +0530

தேவையான ஆவணங்களாக இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**6)** முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 17 ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:38:38 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.08.20 17:38:44 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

சார்பு நீதிமன்றம், நாங்குநேரி

இ.ம.எண்.1/2024 இன்

மே.வ.எண்.195/2020

நேரிய/வரைவு உத்தரவு

நாள். 17.08.2026